## துருசவிய நிதியம்

### 1. நிதிக்கூற்றுக்கள்

### 1.1 அபிப்பிராயம்

இந்த அறிக்கையின் 1.2 ஆம் பந்தியில் விபரிக்கப்பட்ட விடயங்களின் தாக்கத்தினைத் தவிர்த்து நிதிக்கூற்றுக்கள் துருசவிய நிதியத்தின் 2011 திசெம்பர் 31 இல் உள்ளவாறான நிதி நிலைமையினையும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான அதனது நிதிசார் செயலாற்றலினையும் காசுப்பாய்ச்சலினையும் பொதுவாக ஏற்றுக்கொள்ளப்பட்ட கணக்கீட்டுத் தத்துவங்களுக்கு இணங்க உண்மையாகவும் நியாயமாகவும் தருகின்றது என்பது எனது அபிப்பிராயமாகும்.

### 1.2 நிதிக்கூற்றுக்கள் மீதான கருத்துரைகள்

### 1.2.1 கணக்கீட்டுக் குறைபாடு

2011 ஆம் ஆண்டின் இறுதியில் உள்ளவாறான புத்தக பெறுமதியின் அடிப்படையிலான ரூபா 635,902 தொகையான இருப்புக்கள் கணிப்பீடு செய்யப்பட்டு கணக்குகளுக்கு கொண்டுவரப்பட்டிருக்கவில்லை.

### 1.2.2 பெறவேண்டிய மற்றும் செலுத்தவேண்டிய கணக்குகள்

பின்வரும் விடயங்கள் அவதானிக்கப்பட்டன.

(அ) துருசவிய சங்கங்களிலிருந்து நிதியத்தினால் அறவிடவேண்டிய ரூபா 1,445,796 கூட்டுமொத்தமான கடன் பணம் 5 ஆண்டுகளுக்கு மேற்பட்ட காலம் அறவீடு செய்வதற்கு நடவடிக்கை எடுக்கப்படாது தொடர்ச்சியாக அறவிடவேண்டிய மீதியாக நிதிக்கூற்றுக்களில் காட்டப்பட்டிருந்தன.

(ஆ) நிதியம் ஏற்கெனவே பேணிவந்த அலுவலகத்திற்குச் செலுத்தவேண்டிய ரூபா 23,574 தொகையான மின்சாரப் பட்டியல் தீர்த்துவைக்கப்படாது தொடர்ச்சியாக செலுத்தவேண்டிய மீதியாகக் காட்டப்பட்டிருந்தது.

### 1.2.3 சட்டங்கள், விதிகள், பிரமாணங்கள், முகாமைத்துவ தீர்மானங்கள் என்பவற்றுடனான இணக்கமின்மை

2000 ஆம் ஆண்டின் 23 ஆம் இலக்க துருசவிய நிதிய அதிகாரச்சட்டத்தின் 17(4) ஆம் பிரிவின் பிரகாரம் துருசவிய சங்கங்களைப் பதிவுசெய்யும் போதும் இரத்துச் செய்யும் போதும் அதுபற்றிய அறிவித்தலினை வர்த்தமானியில் வெளியிடப்பட வேண்டிய போதிலும் தற்பொழுது பதிவுசெய்துள்ள 663 சங்கங்களில் 370 சங்கங்கள் தொடர்பாக அதன்படி நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.

## 2 நிதி மீளாய்வு

### 2.1 நிதி விளைவுகள்

சமர்ப்பிக்கப்பட்ட நிதிக்கூற்றுக்களின் பிரகாரம் மீளாய்வாண்டிற்கான நிதியத்தின் செயற்பாடுகள் திறைசேரியிடமிருந்து பெற்றுக்கொள்ளப்பட்ட ரூபா 11,786,774 மானியத்தினைக் கணக்கிற்கு எடுத்துக்கொண்டதன் பின்னர் ரூபா 3,293,692 பற்றாக்குறையினை விளைவித்துள்ளதுடன் அதற்கு நேரொத்த முன்னைய ஆண்டிற்காக திறைசேரியிடமிருந்து பெற்றுக்கொள்ளப்பட்ட ரூபா 10,338,033 தொகையான மானியத்தினை கணக்கிற்கு எடுத்துக்கொண்டதன் பின்னர் ரூபா 1,389,864 பற்றாக்குறையினை விளைவித்துள்ளதனால் நிதிசார் விளைவுகள் ரூபா 1,903,828 தொகையால் வீழ்ச்சியினைக் காட்டியது.

### 2.2 பகுப்பாய்வு ரீதியான நிதிசார் மீளாய்வு

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

(அ) மீளாய்வாண்டின் போது நிதியத்தின் வருமானம் ரூபா 12,397,237 ஆக இருந்ததுடன் அதனை முன்னய ஆண்டிற்கான ரூபா 10,926,990 தொகையான வருமானத்துடன் ஒப்பிடுகையில் 13% ஆன அதிகரிப்பு இருந்தது.

(ஆ) மீளாய்வாண்டின் போது நிறுவனத்தின் செயற்பாட்டு செலவுகள் ரூபா 15,690,929 ஆக இருந்ததுடன் முன்னைய ஆண்டிற்கான ரூபா 12,316,854 தொகையான செயற்பாட்டுச் செலவுகளுடன் ஒப்பிடுகையில் 27% ஆன அதிகரிப்பாகும்.

(இ) வருமான அதிகரிப்புச் சதவீதத்தினை விட அதிகமான சதவீதத்தில் செலவுகள் அதிகரித்ததன் காரணமாக முன்னைய ஆண்டுகளுடன் ஒப்பிடுகையில் மீளாய்வாண்டின் போது பற்றாக்குறை ரூபா 137% ஆல் அதிகரித்திருந்தது.

## 2.3 செலவுகள் அதிகரித்தல் மற்றும் மூலதனம் வீழ்ச்சியுறல் சந்தர்ப்பங்கள்

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

(அ) நிதியத்தினை புதிய கட்டிடத்திற்கு மாற்றப்பட்டதன் காரணமாக முன்னைய ஆண்டுடன் ஒப்பிடுகையில் மீளாய்வாண்டின் போது கட்டிட வாடகை 476% ஆல் அதிகரித்திருந்தது.

(ஆ) நிதியத்தில் தொடர்ச்சியாக செயற்பாட்டு வருமானத்தினை மிகைத்து செலவு நிலைமை காணப்பட்டதன் காரணமாக வருடாந்தம் தேறிய சொத்துக்களில் வீழ்ச்சியடைதல் அவதானிக்கப்பட்டது. முன்னைய ஆண்டிற்கான நிதியத்தின் ரூபா 7,825,245 தொகையான தேறிய சொத்துக்கள் மீளாய்வாண்டின் இறுதியில் ரூபா 5,784,436 ஆக இருந்ததனால் அது 26% ஆல் குறைவடைந்திருந்தது.

## 3. செயற்பாட்டு மீளாய்வு

### 3.1 செயலாற்றல்

பின்வரும் விடயங்கள் அவதானிக்கப்பட்டன.

(அ) நிதியத்தில் சங்கங்களை பதிவுசெய்தல் பதிவேட்டின் பிரகாரம் மீளாய்வாண்டின் இறுதியில் 663 துரசவிய சங்கங்கள் பதிவுசெய்யப்பட்டிருந்தன. 2010 திசெம்பர் 31 அளவில் செயற்படாத சங்கங்கள் தொடர்பாக நிதியத்திற்கு அறிவிக்கப்பட்டிருக்கவில்லை என தெரியப்படுத்தியிருந்தும் பல சங்கங்கள் செயற்பாடற்ற நிலையில் காணப்பட்டதாகவும் ச ங்கங்களின் மூலம் அங்கத்தவர்களுக்கு நிறைவேற்றப்படுகின்ற கடமைப்பொறுப்புக்கள் எவ்வாறானவை என்பது தொடர்பாக முறையான விளக்கம் அவர்களுக்கு மத்தியில் இல்லாத சங்கங்களும் காணப்படுகின்றன என்பது கணக்காய்வு வெளிக்கள பரிசோதனையின் போது அவதானிக்கப்பட்டது. எவ்வாறாயினும் மீளாய்வாண்டின் போது 5 சங்கங்கள் மாத்திரம் புதிதாக பதிவுசெய்து கொள்ளப்பட்டிருந்தன.

(ஆ) சங்கங்களினால் காலாண்டு ரீதியாக அறிக்கைகளைச் சமர்ப்பித்தல் பலவீனமான மட்டத்தில் காணப்பட்டதுடன் பதிவுசெய்து கொள்ளப்பட்ட 663 சங்கங்களில் 638 சங்கங்கள் 2011 ஆம் ஆண்டிற்காக அரையாண்டு அறிக்கைகளைக்கூட அனுப்பிவைத்திருக்கவில்லை.

(இ) 2011 ஆம் ஆண்டிற்காக நிதியத்தின் ரூபா 15,690,929 தொகையான ஒட்டுமொத்த செலவுகளில் ரூபா 5,493,790 மாத்திரம் அபிவிருத்தி நடவடிக்கைகளுக்காக செலவு செய்யப்பட்டிருந்தன. அது ஒட்டுமொத்த செலவின் 35% இனை பிரதிநிதித்துவப்படுத்துகின்றன.

(ஈ) 2011 ஆம் ஆண்டிற்காக மதிப்பீடு செய்யப்பட்ட ரூபா 15,659,500 தொகையான செலவுகளை நிதியீட்டம் செய்வதற்காக நிதியத்தினால் ரூபா 2,979,500 தொகையான சொந்த வருமானத்தினைச் சேகரிப்பதற்கு எதிர்பார்க்கப்பட்டிருந்த போதிலும் மீளாய்வாண்டின் போது அதில் ரூபா 484,996 அல்லது 16% ஆன வருமானம் மாத்திரம் சேகரிக்கப்பட்டிருந்துது.

## 3.2 முகாமைத்துவ செயற்திறனின்மை

துருசவிய நிதியத்தின் மூலம் அங்கத்தவர்களிடமிருந்து அறவிடப்படுகின்ற அங்கத்துவப் பணம் தொடர்பாக பின்வரும் விடயங்கள் அவதானிக்கப்பட்டன.

(அ) ஆண்டிற்கான பெறவேண்டிய அங்கத்துவப் பண வருமானம் ஆண்டின் போது பணமாகப் பெறப்பட்டவை என்பவற்றினை கணக்கீடு செய்வதற்காக அங்கத்துவப் பணக் கணக்கு ஒன்று பேணப்பட்டிருக்கவில்லை.

(ஆ) அங்கத்துவ பணத்திலிருந்து நிதியத்திற்குச் செலவு வைக்கப்படுகின்ற 50% பணத்திற்காக தனியான நிதியம் ஒன்றினை உருவாக்கி அவ்வாறு சேகரித்த பணத்திலிருந்து அங்கத்தவர்களுக்கு நலன்கள் வழங்கக்கூடிய வகையில் முறையான வேலைத்திட்டம் ஒன்றினைத் தயாரிப்பது தொடர்பாக சேகரித்த அங்கத்துவ பணத்தினை நிதியத்தின் சாதாரண வங்கி கணக்கிற்கு செலவுவைத்து வருமானமாகக் கணக்குவைக்கப்பட்டிருந்தது. இதற்கிணங்க அங்கத்தவர்களிடமிருந்து சேகரிக்கின்ற பணத்திற்காக முறையான கட்டுப்பாடு ஒன்று இல்லாமையின் காரணமாக அப்பணமும் கூட நிதியத்தின் மீண்வரும் செலவுகளுக்காக செலவு செய்யப்பட்டிருந்ததாக கணக்காய்வில் அவதானிக்கப்பட்டது.

(இ) மேற்கூறியவாறு சேகரிக்கப்படுகின்ற அங்கத்துவப் பணத்தில் அங்கத்தவர்களுக்கு நலன் வழங்கக்கூடிய வகையில் முறையான வேலைத் திட்டம் ஒன்று இனங்காணப்படாததன் காரணமாக நிதியத்திற்கு பணத்தினைச் செலவுவைப்பதற்காக எடுக்கப்பட்ட பல தீர்மானங்கள் துரசவிய சங்கத்தின் மூலம் அமுல்ப்படுத்தப்படவில்லை என்பது கேகாலை பிரதேசத்தில் மேற்கொள்ளப்பட்ட வெளிக்கள பரிசோதனையின் போது அவதானிக்கப்பட்டது.

## 3.3 நிதிகளின் பயன்பாடு

மீளாய்வாண்டின் போது மீண்வரும் செலவுகளுக்காக அரசாங்கத்தினால் ரூபா 6,292,984 தொகை நிதியத்திற்கு வழங்கப்பட்டிருந்தது. எவ்வாறாயினும் இந்த மானியத்தினை வழங்கும் போது நிதியத்தினால் 2011 சனவரி 01 ஆந் திகதி முதலீடு செய்யப்பட்ட ரூபா 3,895,620 தொகை திறைசேரிக்கு வெளிப்படுத்தப்பட்டிருக்கவில்லை. 2011 திசெம்பர் 31 இல் உள்ளவாறு இந்த முதலீட்டின் பெறுமதி ரூபா 4,151,268 ஆக இருந்தது.

## 3.4 சிக்கனமற்ற கொடுக்கல்வாங்கல்கள்

பின்வரும் விடயங்கள் அவதானிக்கப்பட்டன.

(அ) நிதியத்தினால் அதனது அலுவலகம் நடாத்தப்பட்டு வந்த இடத்திற்காக இதுவரை செலுத்தப்பட்ட மாதாந்த கட்டிட வாடகை ரூபா 28,539 ஆக இருந்ததுடன் அதனை இந்த கட்டிடத்திலேயே வேறு இடத்திற்கு எடுத்துச் சென்றதன் காரணமாக மாதாந்த வாடகையாக ரூபா 108,436 தொகையினை செலுத்தவேண்டியிருந்தது. இதற்கிணங்க ஒரு ஆண்டிற்கு ரூபா 958,775 தொகையான சிக்கனமற்ற செலவு மேற்கொள்ளப்பட்டிருந்தன என்பது அவதானிக்கப்பட்டது.

(ஆ) இறப்பர் ஆராய்ச்சி நிறுவனத்தினால் 2008 ஆம் ஆண்டின் போது கொள்வனவு செய்யப்பட்ட 743 பால்வெட்டும் கத்திகளில் 575 பால் வெட்டும் கத்திகள் அங்கீகரிக்கப்பட்ட நியமதரத்தினைக் கொண்டிருக்காததன் காரணமாக 2011 திசெம்பர் 31 ஆந் திகதி வரையும் களஞ்சியல் பயன்பாட்டிற்கு எடுத்துக்கொள்ளமுடியாத நிலையில் காணப்பட்டது. எனவே அதற்காக மேற்கொள்ளப்பட்ட ரூபா 330,625 தொகையான செலவு சிக்கனமற்ற செலவாக அவதானிக்கப்பட்டது.

## 4. கணக்களி தன்மையும் நல்ல ஆளுகையும்

### 4.1 பாதீட்டுக் கட்டுப்பாடு

மீளாய்வாண்டின் போது 04 செலவு விடயங்கள் தொடர்பாக 27% இலிருந்து 91% வரை பாதீடு செய்யப்பட்ட செலவினை மிகைத்து உள்ளபடியான செலவு மேற்கொள்ளப்பட்டமை அவதானிக்கப்பட்டதனால் பாதீடு செயற்திறனான முகாமைத்துவக் கட்டுப்பாட்டுக் கருவியாகப் பயன்படுத்தப்பட்டிருக்கவில்லை என்பது அவதானிக்கப்பட்டது.

## 5. முறைமைகளும் கட்டுப்பாடுகளும்

கணக்காய்வின் போது அவதானிக்கப்பட்ட முறைமைகள் மற்றும் கட்டுப்பாடுகள் தொடர்பான குறைபாடுகள் அவ்வப்போது நிதியத்தின் தலைவரின் கவனத்திற்குக் கொண்டுவரப்பட்டன. பின்வரும் கட்டுப்பாட்டு அம்சங்கள் தொடர்பாக விசேட அவதானம் கோரப்படுகின்றது.

(அ) பாதீட்டுக் கட்டுப்பாடு

(ஆ) இருப்புக் கட்டுப்பாடு

(இ) கொடுப்பனவு உறுதிச்சான்றுகளைத் தயாரித்தல்

(ஈ) துருசவிய சங்கங்களைப் பதிவுசெய்தல்